உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No. 665/2023

பெயர் :இளையராஜா(அ.சா.6)
தகப்பனார் பெயர் :வெங்கட்ராமன்
கணவர் பெயர் :
வயது :43
கிராமம் :குலமங்கலம்
வட்டம் :மதுரை
தொழில் :SBI நகை மதிப்பீட்டாளர்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

25.07.2025

முதல் விசாரணை:

ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் 8வது எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் 3வது எதிரியை தெரியாது. அ.சா.1 சேதுராமனை எனக்கு தெரியும்.கடந்த 2017ம் ஆண்டு 26ம் தேதி ஜீன்மாதம் ஜெயராம் மருத்துவமனையில் தல்லாகுளம் மதுரையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அப்போது ஜெகதீசன் என்பவர் எனக்கு போன் செய்தார். சேதுராமன் அடிபட்டு மருத்துவசிகிச்சையில் இருபபதாக என்னிடம் தகவல் சொன்னார். நான் மருத்துவமனையில் காலை சுமார் 7-11 மணி வரை சேதுராமனோடு இருந்தேன். அப்போது சார்பு ஆய்வாளர் பெயர் தெரியவில்லை. அப்போது எவ்வாறு அடிபட்டது என்று எங்களிடம் வந்து விசாரணை செய்தார். அப்போது சேதுராமன் சார்பு ஆய்வாளரிடம் வாக்குமூலம் கொடுத்தார். அப்போது தனக்கு இடது கையிலும், காலிலும் அடிபட்டதை குறிப்பிட்டார். யார் யார் தன்னை அடித்தார்கள் என்பதை சேதுராமன் தெரிவித்தார். என்னையும் காவலர்கள் விாசரணை செய்தார்கள் நான் அவர்கள் உறவினர் என்ற குறிப்பிட்டேன். என்னையும் சாட்சி பட்டியலில சேர்த்தார்கள். சாட்சியிடம் புகார் வாக்குமூலம் காட்டப்பட்டு அதில் உள்ள 2வது கையெழுத்து தன்னுடையது தான் என்று ஒப்புகொள்ளவே மேற்படி ஆவணம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

எ.த.கு.வி :

என்னுடைய சொந்த ஊர் குலமங்கலம் ஆகும். 2017ம் ஆண்டு நான் SBI கோச்சடை கிளையில் நகை மதிப்பீட்டாளராக பணியாற்றி வந்தேன்.நான் முதல் விசாரணையில் கடந்த 2017 ஜீன் 26ம் தேதி மாலை சுமார் 7- 11 மணி வரை அ.சா.1 சேதுராமனோடு மருததுவமனையில் இருநத்தாக சொன்னவிபரத்தை காவல்துறைவிசாரணையில் தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். சம்பவம் நடந்தது பற்றி நேரடியாக தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் கடந்த 2017 ஜீன் 26ம் தேதி அன்று ஜெயராம் மருத்துவமனையில் மாலை சுமார் 7- 11 மணி வரை அ.சா.1 சேதுராமனோடு மருத்துவமனையில் இருந்தாக வழக்கிற்காக ெ◌ா ய்யாக சொல்கிறேன் என்றும் நான் அ.சா.1ன் உறவினர் என்பதால் பொய் சாட்சயிம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் புகார் வாக்குமுலததில் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான காவல்நிலையத்தில் வைத்து அவர்கள் வசதிக்கேற்ப கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.07.25 18:15:53 +0530

Assistant Sessions Judge

Melur